## August 30, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நிகழ் நிதியாண்டின் (2025-26) முதல் காலாண்டான ஏப்ரல்-ஜூனில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 7.8 சதவீதம் வளர்ச்சியடைந்ததாக மத்திய அரசின் தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதற்கு வேளாண் துறை மற்றும் வர்த்தகம், ஹோட்டல், நிதி மற்றும் நில விற்பனை உள்ளிட்ட சேவைகள் துறையின் வளர்ச்சி முக்கியக் காரணமாகும்.
   i. 2025-26 ஏப்ரல்-ஜூன் காலாண்டில் சீனாவின் ஜிடிபி 5.2 சதவீதம் மட்டுமே வளர்ச்சிய டைந்துள்ளது.
   ii. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.88.19 என்ற அளவிற்கு சரிந்து வரலாறு காணாத வகையில் வீழ்ச் சியடைந்துள்ளது. இந்தியப் பொருள்கள் மீது 50% இறக்குமதி வரியை அமெரிக்கா விதித்துள்ள நிலையில் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிந்து வருவதாகக் கருதப்படுகிறது.

2. இந்தியாவில் அடுத்த 10 ஆண்டுகளில் ரூ. 6 லட்சம் கோடியை (10 டிரில்லியன்யென்) முதலீடு செய்ய ஜப்பான் இலக்கு நிர்ணயித்துள்ளது.
   i. மேலும், அரிய வகை கனிமங்கள், பாதுகாப்புத் துறை மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு எனப் பல்வேறு முக்கியத் துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த மிகப்பெரிய தொலைநோக்கு திட்டத்தை இரு நாடுகளும் வகுத்துள்ளன.
   ii. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற இந்தியா-ஜப்பான் வர்த்தக மாநாட்டில் ஜப்பான் பிரதமர் ஷிகேரு இஷிபாவுடனான வர்த்தக பேச்சுவார்த்தைக்குப் பிறகு இத்தகவலை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.
   iii. கூட்டு விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) - ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் (ஜக்ஸா) இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. நிலவை ஆய்வு செய்யும் இந்தியாவின் 'சந்திரயான்-5' திட்டத்தில் இருநாடுகளும் இணைந்து பணியாற்ற உடன்பாடு மேற்கொள்ளப்பட்டது.

3. ஜப்பான் சென்ற பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் கலாசார சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படும் தரும பொம்மை பரிசளிக்கப்பட்டது.
   i. இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'பிரதமர் மோடிக்கு, ஷோரின்சான் தரும-ஜி கோயிலின் தலைமைப் பூசாரி சிஷி ஹிரோஸ் தரும பொம்மையைப் பரிசளித்தார். இந்த பொம்மை, ஜப்பான் கலாசாரத்தில் மங்களக ரமானதாகக் கருதப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
   ii. தரும பொம்மை, தமிழகத்தின் காஞ்சிபுரத்திலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பான் சென்றதாகக் கூறப்படும் இந்தியத் துறவி 'தரும தைஷி' என்று ஜப்பானில் அழைக்கப்படும் போதிதர்மரை அடிப் படையாகக் கொண்டதாகும்.

4. தமிழக அரசு கொண்டுவந்துள்ள மாடு இனப்பெருக்க சட்டம், நாட்டின மாடுகளை அழிவில் இருந்து பாதுகாக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது.
   i. கடந்த 2019 - ஆம் ஆண்டு 'தமிழ்நாடு மாடு இனப்பெருக்க சட்டம்' தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், இச்சட்டத்தால், நாட்டு இன மாடுகள் அழிவை நோக்கிச் செல்லும் எனக் கூறி நாட்டு இன மாடுஆர்வலர்கள், மாடு வளர்ப்போர் என பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதன் விளைவாக இச்சட்டம் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டது.
   ii. அதன் பிறகு இச்சட்டமானது மறுபரிசீலனைக்கு உள்படுத்தப்பட்டது. அதன் முடிவில் காளைகளை பதிவு செய்யாதவர்களுக்கு ரூ.50,000 அபராதம் விதிப்பது உள்ளிட்ட சில விதிகள் ரத்து செய்யப்பட்டு அண்மையில் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.
   iii. இச்சட்டத்தின்படி, ஜல்லிக்கட்டு காளைகள் உள்பட நாட்டு இனக் காளைகளை வைத்திருப்பவர்கள் அவரவர் கிராமங்களில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனைகளில் பதிவு செய்ய வேண்டும். பதிவுக் கட்டணம் ரூ.200. மேலும் பதிவைப் புதுப்பிக்க ரூ.50 கட்டணம் செலுத்த வேண்டும்.
   iv. நாட்டு இனக் காளைகளை, கலப்பின மற்றும் வெளிநாட்டின பசுக்களுடன் இனச்சேர்க்கை செய்யக் கூடாது. உள்நாட்டு மாடுகளுடன் மட்டுமே இயற்கை இனச்சேர்க்கை செய்ய வேண்டும். முறையாகப் பதிவு செய்யப்பட்ட காளைகளை மட்டுமே இனச்சேர்க்கைக்கு பயன்படுத்த வேண்டும்.
   v. சினை ஊசி தயாரிப்பு, விற்பனை, செயற்கை கருவூட்டல் சேவைகளை தனியார் நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள் வழங்குவதற்கு இச்சட்டம் அனுமதி அளிக்கிறது. இதன்படி, சினை சேமிப்பு நிலையங்கள் தொடங்க ரூ.1 லட்சம், செயற்கை கருவூட்டல் சேவை வழங்க ரூ.50 ஆயிரம் கட்டணமாக செலுத்தி பதிவு செய்யவேண்டும்.
5. கம்போடியாவின் முன்னாள் பிரதமர் ஹன் சென்னுடனான சர்ச்சைக்குரிய தொலை பேசி உரையாடல் தொடர்பாக, தாய்லாந்து பிரதமர் பேடோங் டார்ன் ஷினவத்ராவை அந்தநாட்டு அரசியல் சாசன நீதிமன்றம் பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டது.
   i. தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையே நீண்டகால எல்லைப் பிரச்னை உள்ளது. அதன் ஒரு பகுதியாக, இரு நாட்டுப் படையினருக்கும் கடந்த மாதம் நடந்த மோதலில் 41 பேர் உயிரிழந்தனர். பின்னர் மலேசியா செய்துவைத்த மத்தியஸ்தத்தின் பேரில் இரு நாடுகளும் சண்டை நிறுத்தம் மேற்கொண்டன.
6. நிகழாண்டின் முதல் 6 மாதங்களில் ரஷியாவில் இருந்து இந்தியா உரங்களை இறக்குமதி செய்வது 20 சதவீதம் அதிகரித்து 25 லட்சம் டன்னாக உள்ளது.
   i. இந்தியாவின் மொத்த உரஇறக்குமதியில் ரஷியாவின் பங்களிப்பு

முன்னெப்போதும் இல்லாத வகையில் 33 சதவீ தமாக உயர்ந்துள்ளது.

ii. இந்தியாவுக்கு என்பிகே உரங்களை அதிகம் வழங்கும் நாடாகவும் ரஷியா உள்ளது. இந்தியாவின் தேவைப்படும் உர வகைகளுக்கு ஏற்ப ரஷிய ஆலைகள் உற்பத்தியை அதிகரித்துள்ளன.

7. மாநிலங்களின் வருவாயைப் பாதுகாக்காமல் முன் னெடுக்கப்படும் ஜிஎஸ்டி சீர்திருத் தங்கள் மக்களுக்கு பயனளிக்காது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.
   i. சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) சீர்திருத்தம் என்ற ரில் தற்போது விதிக்கப்படும் 12%, 28% வரி விகிதங்களை நீக்க மாநில நிதியமைச்சர்கள் குழு அண்மை யில் ஒப்புதல் அளித்தது.
   ii. இந்தச் சீர்திருத்தங்களின் நோக்கத்தை வரவேற்கும் அதே வேளையில், மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்புக்கு அவசியமான மாநில வருவாயைப் பாதிக்காத வகையில் இவை அமைய வேண்டும். வரிக் குறைப்பின் பயன்கள் நேரடியாகச் சாமானிய மக்களைச் சென்றடைய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளோம்.
8. சர்வதேச நிதியத்தின் (ஐஎம்எஃப்) நிர்வாக இயக்குநராக முன்னாள் இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) ஆளுநர் உர்ஜித் படேலை நியமிக்க மத்திய அரசு ஒப்பதல் அளித்துள்ளது. அவர் அடுத்த 3 ஆண்டுகளுக்கு இந்தப் பொறுப்பில் இருப்பார்.
   i. ஐஎம்எஃப் நிர்வாக இயக்குநர் பதவியில் 25 பேர் உள்ளனர். இவர்கள் உறுப்பு நாடுகள் மற்றும் உறுப்பு நாடுகள் குழுக்கள் மூலம் தேர்வு செய்யப் படுகின்றனர். இந்தியா, இலங்கை, பூடான், வங்கதேசம் ஆகியவை ஒரு குழு வாக உள்ளது.
9. கஜகஸ்தானில் (ஷிம்கென்ட்) நடைபெற்ற ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் சீனியர், ஜூனியர், யூத் என 3 பிரிவு களிலுமாக இந்தியா 52 தங்கம், 26 வெள்ளி, 25 வெண்கலம் என 103 பதக்கங்களுடன் நிறைவு செய்தது.